உ

சிவமயம்

# ஞானரத்நாவளி

காசிவாசி

செந்திநாத ஐயர்

இயற்றியது

திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை

பதிப்பித்தது.

Expert & Co., Madras.

விலை அணா 4.

# பதிப்புரை.

யாழ்ப்பாணத்து நல்லூர் சி. செந்திநாதையர் எழுதிய இச்சிறு நூல் சென்னை ஞானப்பிரகாச அச்சுக் கூடத்தில் கடந்த 1892-ம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்டது. கிறிஸ்துமதப்போதனைக் கிளர்ச்சியால் இந்து மதப் பிரசாரணம் அக்காலத்தில் அதிதீவிரமாக நடந்தது. Hindu Tract Society மூலமாகப் பல சிறு பிரசுரங்கள் வெளிவந்தன. அப்பிரசுரங்களுள் ஞானரத்நாவளியும் ஒன்று. இது உருவத்திற் சிறியதேயாயினும் பெயருக்கேற்ப, பல அரிய நுட்பங்களை விளக்குவதாம். இக்காலத்தில் உலோகாயதம் எங்கும் அதிகமாகப் பரவியிருப்பதால், இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டியது அவசியமாயிற்று. இப்பிரசுரத்தின் அச்சுச் செலவின் பெரும்பாகத்தை எனது நண்பரும் சைவசிகாமணியுமாகிய பிக்ஷாண்டார் கோயில் மிராசுதார் இராவ்பகதூர் கோ. இராசகோபால பிள்ளையவர்கள் ஏற்றுக்கொண்டனர். அப்பெருந்தகையாரின் உதாரகுணத்திற்கு அறிகுறியாக இப்பதிப்பை அவர்களுக்கே அர்ப்பணஞ்செய்கின்றேன். இப்பதிப்பிற் பல இன்றியமையாத திருத்தங்களும் மாற்றங்களும் புரிந்து புதுப்பித்துதவிய எனது நண்பர் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சே. வெ. ஜம்புலிங்கம்

திருமயிலை
சர்வதாரி
தைப்பூசம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஞான ரத்நாவளி

1 விநாயகர் ஓங்கார வடிவினர்.

ஓங்கார வடிவானவன் பாததாமரையு

முபய பரிபுரமறைகளும். (1)

(துண்டி விநாயகர் திருவருட்பா)

ஓங்காரத் தனியுருவே போற்றி. (2)

(விநாயகர் போற்றித் திருவகவல்)

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்

சரணவற் புதமலர் தலைக்கணி வோமே. (3)

(நறுந்தொகை)

2 சிவனும் உமையும் பிதா மாதா.

கடவுளுடைய அன்பும் இரக்கமும் அருளென்றும் அருட்சத்தி யென்றும் சொல்லப்படும். ஆதலால் கடவுளை நமது பரமபிதா என்றும் அவருடைய அருட்

சத்தியைப் பரமமாதா என்றும் சொல்லுகிறோம். நாம் ஒருவரிடத்திலே எவ்வளவு பற்றோடிருந்தாலும் அவருக்கு ஒரு நன்மையைச் செய்யும்போதுதான் அந்தப் பற்று வெளியாகின்றது. அதுபோலக் கடவுள் உலகங்களைப் படைத்து ஆன்மாக்கள் வாழ்வதற்கு வேண்டிய சரீரம் முதலியவற்றைக் கொடுக்கும்போதுதான் அவருடைய அருட்சத்தி வெளியாகின்றது. இப்படி அருட்சத்தி வெளியாதல் அவர் அருட்சத்தியோடு சேர்தலாகச் சொல்லப்படும். இது திருக்கலியாணமென்றும் கூறப்படும்.

ஈசனரு ளிர்மையறி வியற்ற லின்ப
மிலையமொடு போகமதி கார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ யாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். (1)

அறுவகைச் சமயத் தோர்க்கு
மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா
கமங்களின் குறியி றந்தங்
கறிவினி லருளான் மன்னி
யம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி (2)
சென்னி வைப்பாம்.

(சிவஞான சித்தியார்)

### 3 நடராசர்

சிவத்தியானத்திற்கு நடராச வடிவம் மிகவும் பொருத்தமானது. அவ்வுருவத்திலடங்கிய ஒவ்வொரு பாகமும் அரிய உண்மைகளை விளக்கி நம்மை நல் வழியிற் செலுத்தத்தக்கது. ஒரு திருக்கரத்திலேயுள்ள உடுக்கையானது படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. கடவுள் நம்மைப் படைத்தது நாம் மெய்ப்பொருளாகிய அவரையடைந்து பேரானந்தத்தைப் பெறுதற்காக என்பதை அது காட்டத்தக்கது. மற்றொரு திருக்கரம் அபயமளிக்கின்றது. அதாவது: நாம் உங்களைக் காப்போம் நீங்கள் பயப்படவேண்டாம் என்னும் குறிப்பையுடையது. வேறொரு திருக்கரத்திலே நெருப்பு இருக்கின்றது. அது அழித்தலைக் குறிக்கின்றது. நான்காவது திருக்கரம் குஞ்சித பாதத்தைக் காட்டுகின்றது.

திருவடிகளுள் ஊன்றிய பாதம் முயலகனை மிதித்து ஆணவத்தை நசித்தலைக் குறிக்கின்றது. தூக்கிய திருப்வடி அவர் நம்மைத் தம்மோடு சேர்த்துத் தம்மை போல் ஆக்குவார் என்னும் அருளைக் காட்டுகின்றது.

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றிடுமங் கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப் பதத்தே நாடு.

(உண்மை விளக்கம்)

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னானில வளாகமும்
ஏனைப் புவனமு மெண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் னமைத்தபொற் கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழி லைந்துநின் மெய்த்தொழில்

(சிதம்பரமும்மணிக்கோவை)

## 4 சிவனுடைய அங்க ப்ரத்தியங்கம் சாங்க உபாங்கமனைத்தும் அருள்வடிவே.

உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதிசாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு ளனக்கொன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமலன் றானே.

(சிவஞானசித்தியார்)

அங்கமாவன:-சிரசும், முகமும், இருதயமுமாம்.

பிரத்தியங்க மாவன:- மார்பும், கண்டமும், ஸ்தனங்களும், தோள்களும், நாபியும், உதரமும், குஹ்யமும், கண்களும், நாசியும், காதும், கைகளும், பாதங்களும். விரல்களும், துடைகளும், முழந்தாள்களும், கணைக்கால்களுமாம்

சங்கமாவன:- ஆரிண்ணியாதிகுணத்திரயம்-திரிசூலம், சத்தியட்-பரசு, பிரதாபம்-கட்கம் தார்பேத்தியம் வச்சிரம் அநுக்கிரகம்-அபயமுத்திரை, ருத்தியாதி சுத்தமாயை-நாகம், அதோமாயை-பாசம், விவர்ணம்-அங்குசம், சத்தநாதம்-கண்டை, பாசசங்காரம்-அக்கி

உபாங்கமாவன:— வஸ்திரம் ... மாலை,

MAHAMAHOPADHYAYA ... LIBRAR

கந்தம், ஆசனம், ஆபரணம், ஆவரணம் என்னும் இவ்வேழுமாம்

(5) சிவனுடைய சந்திரன்; ஏறூர்தல்; அவனவளது நிலே; முக்கண், மான், சூலம்: அட்டமூர்த்தம்.

எல்லாம் அறிபவர் (சருவஞ்ஞர்) என்பதும் தூமதியைச் (சந்திரனை) சூடினமையாலும், எப்பொருட்கும் இறைவரென்பது தருமவடிவினதாகிய ஏறூர்தலினுலும், அவர் எவர்க்கும் எவற்றிற்கும் பொதுநிலையரென்பது "அது அவள் அவன்" என நின்றமையாலும் அவரிடத்திலே முத்தி வேள்வியும் தொக்கவென்பது முக்கண்ணர் என்றமையாலும், வேதநாயகரென்பது வேதங்களைக் (கால்களாகக்கொண்ட) மான்மறி உடைமையாலும், அவர் பிரம விஷ்ணு ருத்திரரென்னும் அம் மூவராய் நின்றமை ஒருதாட்சூலமேந்துதலினுலும் அவர் உலகத்துண்மையினரென்பது (பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா என்னும்) அட்டமூர்த்தத்தினுலும், அவருடைய பிறவடிவும் வண்ணமும் அவர் பெருமையையே யுணர்த்துமெனவும் அறியப்படும்.

*தூமதி சடைமிசைச் சூடுத றூநெறி*
*யாமதி யானென வமைத்த வாறே*
*அறனுரு வாகிய வானே றூர்தல்*

இறையவ னியானென வியற்றுமாறே
அதவவளவ னெனநின்றமை யார்க்கும்
பொதுநிலை யானென வுணர்த்திய பொருளே
முக்கண னென்பது மூத்தீ வேள்வியிற்
றொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதன் மற்றதன்
நாதனு னென்ன நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதன்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில்
உண்மை யானென வுணர்த்திய வாறே
நிலநீர் தீவளி யனன்வா னென்று
மூலவாத் தொல்புக ழுடையோ யென்றும்
பொருளுநற் பூதப் படையோ யென்றும்
தெருளநின் றுலகினிற் றெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை யுணர்த்தவு முணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வண்மையிற் சுழலு மாந்தர்க்
காதியாகிய வறுதொழி லாளர்

(பதினோராந்திருமுறை.)

## 6 திருவாசி

## ஓங்காரமே திருவாசி

ஓங்கார மேநற் றிநவாசி யுற்றதனில்
நீகா வெழுத்தே நிறைசுடராம்— ஆங்காரம்
அற்றா ரறிவரணி யம்பல நதா ஞடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்.

(உண்மை விளக்கம்)

## 7 இடபம்.

சிவனேறாம் **இடபம்** ஞானமயம்

சொன் மறைத்தொகை யாகம முதலிய துதிப்பப்
பொன்மை பெற்றதன் கோகர் நீஙகியே பொற்றாள்
வன்மை பெற்றதுண் டோதரன் மொய்ம்பிலை— வைத்துச்
சின்ம யத்தனி மால்விடை யேறினன் சிவனே.

(கந்தபுராணம்.)

## 8 பூணூல். சிகை

பூணூல் வேதாந்தத்தையும், சிகை ஞானத்தையும், குறிக்கும்.

நாலுஞ்சிகையு நுவலிற்பிரமமோ
நூலதுகாற்பாச நுண்சிகைகோசமாம்
நூலதுவேதாந்த நுண்சிகைஞானமாம்
நாலுடையந்தணர் காணு நுவலிலே,

(திருமந்திரம்.)

## 9 முடி

முடி அத்துவிதத்தைக் குறிக்கும்

அத்வைதகிரந்தி:.

(பாசுபதப் பிரமோபநிடதம்)

## 10 கந்தசுவாமி

ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகனுருவங்காணப்படும்
ஓங்கார மூலப்பொருளாயுயிர்தோறுமென்று
நீங்கா தமருங் குமரேசனை (1)

ஓமெனப்படுங்குடிலையே யொப்பிலாமுருகன்
மாமுகத்துளொன்றாம் (2)

(கந்தபுராணம்.)

ஆங்காரமு மடங்கா ரொடுங் கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வாரியம தூதருக்கே.

(கந்தரலங்காரம்)

## 11 கந்தசுவாமியின் ஆறுமுகம்

சிவபெருமானுக்குரிய சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசக்தி, சுவதந்திரத்துவம் என்னும் அந்த சாட்குணங்களும் கந்தசுவாமியுடைய ஆறுமுகங்கள் என்பர். (சருவஞ்ஞதை—முற்றறிவு; திருப்தி—வரம்பிலின்பமுடைமை; அநாதி போதம்—இயல்பாகவே பாசங்களினீங்குதல், அலுப்த

சத்தி—பேரருளுடைமை; அநந்தசத்தி—முடிவிலாற்றலுடைமை; சுவதந்திரத்துவம்—தம்வயமுடைமை,

எவர்தம் பாலு மின்றி யெல்லை தீ ரமலற்குள்ள
முவிந குணங்களாஞ் சேய்த்த முகங்களாய் வந்த வென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகு மையன்
ஆவிக ளருளு மாற்ற னறுமுகங் கொண்டா னன்றே.

(கந்தபுராணம்)

## 12 வேலாயுதம்

ஆன்மாக்களுக்கு முத்தியின்பங் கொடுக்க விரும்பும் விருப்பமெனப்படும் இச்சாசத்தியும், அதற்கு வேண்டுமவைகளை அறியும் அறிவெனப்படும் ஞான சத்தியும், அறிந்தவைகளைச் செய்யும் செயலெனப் படும் கிரியா சத்தியுமாகிய மூன்று சத்திகளின் அடுக்கு வேலாயுதமாம் என்க.

இச்சா ஞானக் கிரியையெனு
மிவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுந்திட்
டச்சா றுழி யறச்சுவற்று
மயில்வே லொருகை வலத்தமைத்து,

(திருத்தணிகைப்புராணம்.)

## 13 தெய்வயானையம்மை வள்ளியம்மை

தெய்வயானையம்மை வள்ளியம்மையென்னும் இருவரும் முறையே சுப்பிரமணிய சுவாமியினுடைய ஞான சத்தியும் கிரியாசத்தியுமாவர்.

கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்.

(கந்த புராணம்)

## 14 ஞானபூசை

ஆன்மா சிவனுடைய பரசிவ பூரண ஞானப்பிரகாசத்தில் அழுந்துவது ஆவாகனம். அதில் நிலைபெறுதல் தாபனம். ஆன்ம அறிவு சிவபூரணத்திலும் சிவபூரணத்துவம் ஆன்ம அறிவிலும், ஒன்றையொன்று பிரியாதிருத்தல் சந்நிதானம். ஆன்ம அறிவு என்றும் ஒழிவின்றிச் சிவத்திலே சமைந்துபோதல் சந்நிரோதனம். ஆன்ம சுத்தியின்பொருட்டுக் கொடுக்கப்படுவது பாத்தியாசமனார்க்கியம். மோக்ஷஇன்பத்தின் பொருட்டுக் கொடுக்கப்படுவது புஷ்பம். நின்மலசுத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது மஹாபிஷேகம். அறியாமையை ஒழித்து அறிவைப் பெறும்பொருட்டுக்

கொடுக்கப்படுவது தூபதீபம். சிவானுபூதியின் பொருட்டுக் கொடுக்கப்படுவது நைவேத்தியம். சிவவியாபகம் ஆன்மாவில் விளங்குதலின் பொருட்டுச் செய்யப்படுவது பிரதட்சிணம். ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாதல் நமஸ்காரம்.

இப்படித் தரைமுதற் சமனை யீறுயச்,
செப்பிவியா பிக்கும் பரம சிவனது
பொருளி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவிலமுழ்ந்துத லாவா கனமே
அலையா தழுந்த நிலைபெறல் தாபனம்.
இவன்தன தறிவு சிவன்பூ ரணத்திலுந்
சிவன்பூரணத்துவம் இவன்தன தறிவிலும்
ஒன்றையொன் றகலா துறவுசெய் திருப்ப
தொன்றிய சந்நி தானமென் றுரைப்பர்
இவனிடத் துறமறி
வென்று மொழிவறச்
சமைவது தானே சந்நிரோதனமே.
பாத்தி யாசம னர்க்கியம் பமுதக
லான்ம சுத்தி நிமித்த மாகவும்,
நறுமல ரதனை நல்வீட் டின்பம்
குறுகுத லேது வாகவுங் கொடுத்து
நிகழ் மல சுத்தி நிமித்த மாக
மகிழ்வுட னேதிரு மஞ்சனம் பண்ணி,

ஞான விளக்க நண்ணுதற் பொருட்டுத்
தூப தீபந் துதைந்தினி தளித்து
பின்பனம் மைமவு பிறத்தற் பொருட்டு,
நைவேத் தியமுக வாசமு நல்கி,
அயன்மா லிவர்க்கீ மூரகையின் பொருட்டுச்
செயமாண் புறவெதிர் தண்டம் பண்ணி

(சதாசிவரூபம்)

ஆவாஹநம் சாத்மநி சித்ப்ரகாசே
தத்ர ஸ்திதி: ஸ்தாபநமீச்வரஸ்ய
ஸாந்நித்ய மாத்மேச்வரஸந்நிதாநம்
நிரோதநம் ஸ்வஸ்ய சிவே நிரோத:,,

மாயாத்வயஸ்ய களநம் பாத்யாசமநாதிகம்,
கர்மத்ரயவிநாச: ஸ்யாதர்க்யமஜ்ஞானமோசநம்,,
மஹாபிஷேகம் நைர்மல்யம் வஸ்த்ரசுத்தநிராவ்ருதி:,
அஜ்ஞாநவாஸநாநா சோதூபோ தீப: ஸ்வயம்ப்ரபா,,
சிவாநுபூதிர் நைவேத்யம் பாநீயம்ச ஸ்வாவஸிதம்
கஷாயகளநம் ஜாதம் தாம்பூலம் முகவாஸநம்
ப்ரதக்ஷிணம்ச ஸர்வத்ர வ்யாபகம் ஸஹ சம்புநா
ஸரித்ஸமுத்ரஸம்யோகாஜ்ஜலம் ஸமரஸம் யதா
ததா சாத்மஶிவயோர் யோகாந்நமஸ்கார: ப்ரகீர்த்யதே.

(பூஜாஸ்தவம்)

மானச சுத்தியே நல்லபுஷ்பம். பொறுமையே பாத்தியாசமனர்க்கியம். நிச்சயமாக நிலைபெற்றிருக்கும் புத்தியே குங்கும சந்தனாதியாம். மானச (தூப) பாத்திரத்திலே பிராணவாயுவே அக்கினி. அகங்காரமே பரம தூபம். சர்வப்பிரமாணமாகிய சிற்சத்தியே தீபம். பாரத்திவோபசாரம் நைவேத்தியம். ஆப்பியோபசாரம் பானீயம். தைஜஸோபசாரம் கண்ணாடி. வாயவீயோபசாரம் விசிறி. வைஹாயஸோபசாரம் ஸ்தோத்திரம்.

ஹ்ருத்பத்மே மாநஸாவிபாவித மஹாமாயோபரிஸ்தாஸநே
த்யேயோ தீபசிகாக்ருதிஸ்ஸுகுஸுமம் பாவக்ஷமாக்யம்ஜலம்
லேபோ தீரவஸாயிநீபரசிவே ப்ராணோ நலோ மாநஸே
பாத்ரே ஹங்க்ருதிரேஷ ஏவ பரமோ தூபோ தமாநாத்மக:
தீபஸ்ஸத்விஷயா ஸுத்ருப்திகரணே கந்தாதய ஷ்மாதிகா:
பாநீயாதிகதர்ப்பணவ்யஜநகஸ்தோத்ராதிகா வேதநம்,
நைவேத்யம் ஸ்வயமுத்யதா ஸமநயாஸம் ஸ்பர்சாங்கஹிநோயத
புக்த ஸ்ய ஸ்வயமேவ நாதமநுநா ஜாப: ஸநாப்யுத்தித:,

(ஸித்தாந்தஸாராவளி).

## 15 பக்திபுஷ்பம்

சித்தந் தெளிவீர்கா, ளத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே.

(தேவாரம்)

கோல்லாமை, ஐம்போறியடக்கல், போறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு. என்பன அஷ்டபுஷ்பமாம். (சிவஞானபோதவுரை)

## 16 விரதம்.

கொல்லா விரதமே விரதம்.

கொல்லாவிரதம் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே

(தாயுமானவர்)

## 17 ஞானம்விளக்கு.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

(தேவாரம்)

## 18 கும்பலக்ஷணம்.

கும்பத்திலே போர்த்த வஸ்திரம் தோலாகவும்: கும்பத்திலே சிவப்பேறப் பூசியமண் இரத்தமாகவும் குடத்துமண் மாமிசமாகவும், கும்பத்தில் நிறைந்தசலம் மேதஸாகவும், தர்ப்பையினாற்செய்த கூர்ச்சமானது எலும்பாகவும், நாலுபக்கத்துஞ் சுற்றப்பட்டநூல்

நரம்பாகவும், கும்பத்துட்போடப்பட்ட நவரத்தின சுவர்ணபுஷ்பமானது சுக்கிலமாகவும், நியசிக்கப்பட்ட மந்திரம் உயிராகவும், கீழே இடப்பட்ட நெல்லு அரிசி எள்ளு பயறு உளுந்து துவரை கோதுமை என்னும் ஏழுவகைத்தானியமும் ஆசனமாகவும் சொல்லப்படும்.

வஸ்த்ரம் சர்ம விலிப்தம்ருச்ச ருதிரம் மாம்ஸம்கடேம்ருத்திகா மெதஸ்தோயமதாஸ்தி கூர்ச்சமபித: ஸம்வீதஸூத்ரம் ஸிரா சுக்லம் மத்யகரதநஹேமகுஸுமம் ந்யஸ்தோ மநுர் ஜீவிதம் தாக்யம் ஸப்தகமாஸநம் மகவிதெள சம்போரிதம்பூஜநம்.,

(சித்தாந்த ஸாராவளி)

## 19 முப்புரம்·

முப்புரமென்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மல காரியமாமென்க.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே.

(திருமந்திரம்.)

## 20 விபூதி

பாசத்தை ஒழிப்பது விபூதி

தேசமலி பொது ஞானச் செவ்வொளியுந்திகழ்பதியாம்
ஈசனது ஈட்டத்தொழிலுமிலங்குபல வுயிர்த்தொகையும்

10948 6336

பாசமறங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறும்
ஆசறநெழுத்தஞ்ச மநாதியிலை யாருக.

(கோயிற்புராணம்.)

உண்மைாக கழுவுவது நீறென்றே
வுபநிடத முரைப்பக் கேட்டும்.
(தேவிபாகவதப் புராணம்)

## 21 மகோற்சவம்

மகோற்சவநாள் பத்தினுள், முதல்நாள்விழா ஆல நீக்குதற் பொருட்டும், இரண்டாநாள்விழா ஆலகூத்தும் நீக்குதற்பொருட்டும், மூன்றாநாள்விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மலமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத்தோற்றமும் நீக்குதற்பொருட்டும், ஐந்தாநாள விழா ஐம்பொறியும், ஐங்கவத்தையும், ஐந்துமலமும் நீக்குதற்பொருட்டும், ஆறாநாள் விழா காமாதியாறுங் கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற்பொருட்டும், ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும், கலாதிகளேழும், மாயாமல குணமேழும் நீக்குதற்பொருட்டும், எட்டாநாள்விழா எண்குணம் விளக்குதற்பொருட்டும், ஒன்பதாநாள் விழா மூன்று

நவும். முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இலை யெனற்பொருட்டும், பத்தாநாள் விழா பராநந்தமாக் கடலில் அழுந்துதற் பொருட்டும் செய்யப்படும்.

(சைவசமயநெறியுரை)

## 22 கொடி மரம்

திருவிழாக்காலத்திலே கோயிலின் கொடிமரத்திலே சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். அச்சீலையிலே இடபமாகிய பசு எழுதப்பட்டிருக்கின்றது சீலையோடு தர்ப்பைக் கயிறும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கொடி மரம் சிவம் என்றும் இடபம் எழுதப்பட்ட சீலை ஆன்மாவென்றும் தர்ப்பைக்கயிறு பாச மென்றும் சிவாகமம் கூறுகின்றது:-

பதி: ஸ்தம்ப இதி ப்ரோக்த: பசுராத்மா இதி ஸ்ம்ருத:
ரஜ்ஜு: பாச இதிப்ரோக்த ஸ்த்ரிவிதாஸ்தே ஸ்மரந்சதி

கடவுளிடத்தே ஆன்மா தங்கியிருப்பது போலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடி மரமும் சீலையும் இருவேறு பொருள்களாயினும் அவற்றைப் பார்ப்பவர்கள் கொடி மரமாகிய ஒரே பொருளாக மதிக்கின்றனர். சிவமும் ஆன்மாவும் அத்துவிதசம்பந்த முடையவை என்பதை இது விளக்குகின்றது. கயிறு சீலையைச்சுற்றியிருப்பது போலப் பாசம்

ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. முப்பொருட் சம்பந்தங்களைக் கொடிமரம் நன்கு காட்டுகின்றது.

23 கைலாசம்.

இருதயகமலம் இரவிபிம்பம் முதலிய எவ்விடங்களிலே சிவபெருமான் உபாசிக்கப்படினும், அவ்வவ்விடமனைத்தும் அவருக்குச் சோதிமய பரமாகாசமாகிய பர சிவலோகமெனப்படுங் கைலாசமாகும். (கைலாசம் நிரதிசய ஆனந்தத்துக்கு உறையுள்.)

24 தசசம்ஸ்காரம்

புதல்வனுடைய (சீடனுடைய) ஆவியை வாங்கி மூலாதார அருட்சத்தி தேகத்திலே பொருந்த அமைத்தல் இருதுசங்கம்; மலத்தினின்று பிரிந்து சிவனுக்குப் புதல்வனாதல் கருப்பாதானம்; திருவருட்குணங்கள் விளங்கப்பெறுதல் பும்ஸவனம்; அருவமாய மாயையை ஆன்மா அறியும் விவேகம் சீமந்தோன்னயனம்; சிவ முதற்பொருளையெல்லாம் மருவி உட்கோடல் சனனம்; மும்மலமகன்று தன்னுள்ளே சிவத்துவந்தோன்றல் நாமகரணம்; பேரானந்தம் புசித்துப் பிரியாதிருத்தல் அன்னப்பிராசனம்; சிவமே மேலாய்த்தோன்றுதல் சௌளம்; அளவிலாப் பாசசாலங்களை அகற்றும் மெய்ஞ்ஞான நூலோடு பழகுதல் உபநயனம்; இந்திரியவிஷய அறிவைத் தூர்த்தல் விரதாதேச்சம்ஸ்காரமாகும்.

திருச்சிற்றம்பலம்

இந் நூல் விலைக்குக் கிடைக்கும் இடம் :—

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
26, காரணேசுரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.